People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்

1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு
## 15.03.2009 முதல் 21.03.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 286. | 15.03.2009 | **மதுரை மாவட்டம் :** உசிலம்பட்டி அருகே உள்ள அல்லிகுண்டம் ஊரைச் சேர்ந்தவர் தினகரன். இவரது மகன் ராமு (25). அதே ஊரைச் சேர்ந்த துரைப்பாண்டி மகள் ரேகாவுக்கும் 4 மாதங்களுக்கு முன் திருமணம் நடந்தது. இருவருக்குமிடையில் ஏற்பட்ட பிரச்சினையில் தினகரன் ஊர் பஞ்சாயத்து மூலம் விவாகரத்துக் பெற்று பின் ரேகாவுக்கு வேறு மாப்பிள்ளை மறுமண ஏற்பாடு நடைபெற்றது. இதனால் மனமுடைந்து ராமு தற்கொலை செய்து கொண்டார். | கட்டப் பஞ்சாயத்து | |
| 287. | 15.03.2009 | **மதுரை மாவட்டம் :** நாகமலை புதுக்கோட்டையைச் சேர்ந்தவர் செல்வம். இவரது மகள் சுதா (13) மகன் பன்னீர் செல்வம் (11). குஜராத் முறுக்குக் கம்பெனியில் ஸ்ரீராம் என்பவர் கொத்தடிமையாக நடத்தியவர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கை தாக்கல் செய்ய உயர்நீதிமன்றக் கிளை உத்தரவிட்டது. | கொத்தடிமை | தினகரன் |
| 288. | 15.03.2009 | **நாமக்கல் மாவட்டம் :** கொண்டப்பநாகக்கன் பட்டியைச் சேர்ந்தவர் செங்கோடன். இவரது மகள் அருகில் உள்ள பள்ளியில் +2 படிக்கிறார். வீட்டில் தனியா இருந்த மாணவியை செந்தில் என்பவர் கடத்திச் சென்றதாகச் சேந்தமங்கலம் போலீசார் வழக்குப் புதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | „ |
| 289. | 15.03.2009 | **மதுரை மாவட்டம் :** திருநகர் அருகே தனக்கன் குளம் கீழத் தெருவைச்சேர்ந்தவர் காசிமாயன். இவரது மகள் செல்வப் பிரியா(5). மனநலம் பாதிக்கப்பட்டவர். இவரை சந்தானம் (61) என்பவர் பாலரியல் பலாத்காரம் செய்ததாக திருப்பரங்குன்றம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | „ |
| 290. | 15.03.2009 | **கடலூர் மாவட்டம் :** நல்லாத்தூர் கிராமம் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் எல்லையோரத்தில் உள்ளது. இங்கு மக்களால் தேர்ந்ததெடுக்கப்பட்ட தலித் உறுப்பினர்கள் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை. ஆண்டாண்டு காலமாக அடைக்கப்பட்டவர்களாக வசித்து வருகிறார்கள். | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | „ |
| 291. | 15.03.2009 | **விருதுநகர் மாவட்டம் :** அரசு பள்ளிகளில் பணம் வசூலிக்கக்கூடாது என்று தமிழக அரசு அறிவித்திருந்த போதிலும் பல ஊர்களில் இன்னும் ஏழை மாணவ மாணவிகள் பெற்றோர்களிடம் மோசடியாக வசூல் வேட்டை நடந்துகொண்டே உள்ளது. | பள்ளி வன்முறை | தீக்கதிர் |
| 292. | 15.03.2009 | **கன்னியாகுமரி மாவட்டம் :** முஞ்சிறையில் வீட்டில் தனியாக இருந்த சுலோச்சனா என்பவரை | பாலியல் வன்கொடுமை | தமிழ் ஓசை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்துவிட்டு நகைகளைக் கொள்ளை அடித்தனர். இதுகுறித்து உதவிக் காவல் துணைக் கண்காணிப்பாளர் விசாரணை நடத்தி வருகிறார். | | |
| 293. | 15.03.2009 | **தூத்துக்குடி மாவட்டம்:** தூத்துக்குடி தனியாருகுகுச் சொந்தமான நிலத்தில் ரூ. ஒரு கோடி மதிப்பிலான மணலைச் சட்டத்திற்கு எதிராக அள்ளிய தனியார் ஒப்பந்த நிறுவனத்தைச் சேர்ந்த 6 பேர் மீது காவல் துறையினர் தேடி வருகின்றனர். | மணல் கொள்ளை | |
| 294. | 15.03.2009 | **தஞ்சாவூர் மாவட்டம் :** அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் புத்தூர், நடுப்பட்டி வடக்குத் தோப்பு உள்ளிட்ட சிற்றூர் கிராமங்களில் வாழும் ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மக்களை உக்கடைப் பண்ணை உரிமையாளர்களான அப்பாவுத் தேவர் பண்ணையில் கொத்தடிமைகளாக இருந்து வருகிறார். அப்பாவுத் தேவர் கைது செய்யக் கோரி அனைத்திந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தினர் உண்ணாநிலை. | கொத்தடிமை | |
| 295. | 16.03.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** கலசபாக்கம் அருகே உள்ள வடகருங்காலிபட்டி கிராமத்தைச் சேர்ந்தவன் காந்தி கூலித் தொழிலாளி இவருடைய மனைவி தனலெட்சுமி (27) இவர்களுக்கு ஜீவிதா (9) மோனிகா (1 1/2) என்ற 2 குழந்தைகள் கணவன், மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையில் தனலெட்சுமி தனது இரண்டு குழந்தைகளுடம் தானும் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 296. | 16.03.2009 | **சென்னை மாவட்டம்:** சென்னையில் இளம் பெண்களைக் கடத்தி சிறை வைத்து விபச்சாரத்திற்கு விற்பனை செய்யும் கலாச்சாரம் பெருமளவில் வளர்ந்துள்ளது. விபச்சாரத்திற்காக சிறை வைக்கப்பட்ட 16 வயது சிறுமி உட்பட 5 பெண்கள் போலீசாரால் மீட்கப்பட்டனர் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 297. | 16.03.2009 | **மதுரை மாவட்டம்:** மதுரை மத்திய சிறைச்சாலை மீது அபோடு தொண்ட மைய நிர்வாகி இருதயராஜ் சிறைத் துறை அதிகாரிகள் சித்திரவதை செய்த சம்பவம். இது குறித்து குற்றச்சாட்டுகளை சிறை உயர்அதிகாரிகள் மறுப்பு தெரிவித்தனர். | காவல் நிலைய அதிகாரிகள் | |
| 298. | 16.03.2009 | **விருதுநகர் மாவட்டம்:** மணல் கடத்தலைத் தடுக்க எஸ்.ஐ. துரைச்சாமி, ஏட்டு ராஜகோபால் மீது டிராக்டர் ஏற்றிக் கொல்ல முயன்ற முருகன், முருகானந்தம், தர்மா ஆகிய மூவரையும் போலீசார் கைது செய்தனர் | காவல் நிலைய வன்முறை | |
| 299. | 16.03.2009 | **மதுரை மாவட்டம்:** சமயநல்லூர் அருகே சத்தியமூர்த்தி நகரைச் சேர்ந்தவர் செல்வி. இவரது கணவர் கவியரசு 23) இவரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். செல்வியிடம் அவரது குடும்பத்தினர் ஆட்டோ கேட்டுத் துன்புறுத்தினர். இது குறித்து சமயநல்லூர் மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |

| | | | | |
|---|---|---|---|---|
| 300. | 16.03.2009 | **தூத்துக்குடி மாவட்டம்:** எட்டயபுரத்தை அடுதுதுள்ள தாப்பாத்தியைச் சேர்ந்தவர் நீலா (38). விளாத்திகுளம் கூட்டறவு பாங்கில் உதவியாளராகப் பணியாற்றுகிறார். இவர் பேங்கில் செலுத்துவதற்காக 20 லட்சம் பணத்தைக் கையாடல். நீலா மற்றும் கள்ளக் காதலனி முருகன் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர். | முறைகேடு | |
| 301. | 16.03.2009 | **சிவகங்கை மாவட்டம்:** தேவகோட்டை அருகே சரஸ்வதி வாசகசாலைப் பகுதியைச் சேர்ந்தவர் கருணாநிதி. இவரின் மனைவி தமிழ் செல்வி. இவருக்கு காரைக்குடி வ.உ.சி. சாலையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அறுவை மருத்துவம் நடந்த இரண்டு நாட்கள் கழித்து தமிழ்செல்வி இறந்தார். இது குறித்து காரைக்குடி வடக்கு காவல் துறையினர் புகார். | மருத்துவர் அலட்சியம் | |
| 302. | 16.03.2009 | **திருநெல்வேலி மாவட்டம்:** நாங்குநேரி அருகே செலுத்திய பணத்திற்கு மாதாமாதம் வட்டிப் பணம் கேட்டு இந்திரா என்ற பெண் முனியாண்டி வீட்டைப் பூட்டிவிட்டு சாவியை எடுத்துச் சென்றார். இது குறித்து நாஙகுநேரி காவல் நிலையத்தில் புகார். | கந்துவட்டி | |
| 303. | 16.03.2009 | **கோயமுத்தூர் மாவட்டம்:** கோவை அருகே நொய்யலாற்றில் மணல் கடத்திலைத் தடுக்க தலித் அருந்ததியர் பகதி மற்றும் குமார் இருவரை ஆதிக்க சாதியைச் சேர்ந்த சாமிநாதன் அவரது மகனும் சேர்ந்து அரிவாளால் வெட்டிப் படுகாயம் அடைந்தனர். | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | |
| 304. | 16.03.2009 | **தேனி மாவட்டம்:** பெரியகுளத்தில் தோட்டக்கலைக் கல்லூரி இரண்டாம் ஆண்டு படிக்கும் மதுபாலா (19) திருவண்ணாமலை பகுதியைச் சேர்ந்தவர். இவர் கல்லூரி விடுதியில் தூக்குப்போட்டு இறந்துள்ளார். இது குறித்து வடகரை காவல் நிலையத்தில் புகார் | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 305. | 16.03.2009 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி பகுதி அனுமந்தகுடி அருகில் தேவகோட்டையை சேர்ந்தவர் தேன்மொழி செல்வி (280 இவர் ஒரு சிகிச்சைக்காக அங்குள்ள தனியார் மருத்துவமனையில் சேர்ந்துள்ளார். அவருக்கு அங்கு அறுவை சிகிச்சை செய்தார். அதிகம் ரத்த போக்கு ஏற்பட்டு இறந்ததாக அவரது தந்தை போலீசில் புகார். வழக்கு பதிவு. விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை. மருத்துவர் அலட்சியம். | Indian Express |
| 306. | 16.03.2009 | **கோவை மாவட்டம்:** தொண்டாமுத்தூர் ஒன்றியப் பகுதியில் தென்னம்நல்லூர் பஞ்சாய்துக்குட்பட்டது சந்தேககவுண்டன்பாளையம். இங்கு 84 அருந்ததியர் மக்கள் வசித்து வருகின்றனர். இந்த குடியிருப்பு அருகே நொய்யல் ஆறு இருக்கிறது. சாமநாத கவுண்டர் என்பவரும் அவரது மகனும் டிராக்டரில் மணல் அள்ளிக் கொண்டு சென்றனர். இதை அப்பகுதி மக்கள் தடுத்தனர். தாழ்ந்த சாதியினர் எங்களுக்கு புத்தில் சொல்வதா என அரிவாளால் வெட்டியுள்ளார்கள். பகவதி, குமார் படுகாயம். கோவை மருத்துவமனையில் சிகிச்சை. | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 307. | 16.03.2009 | **நாகப்பட்டினம் மாவட்டம்:** குத்தாலம் அருகில் உள்ள பேரளந்தூர் மேலதெரு சர்புனிசா முதல் கணவர் இறந்து விட்டதினால் இரண்டாவதாக உஸ்மான் என்பவரை திருமணம் செய்து கொண்டார். வேலைக்கு செல்லாமல் மனைவியிடம் பணம் கேட்டு உஸ்மான் தொல்லை. அடித்து உதைத்து சித்ரவதை. பெற்றோர் வீட்டிற்கு சென்று உடலில் மண்ணெணைய் ஊற்றி தீ வைப்பு. இறப்பு. வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 308. | 16.03.2009 | **சென்னை மாவட்டம்:** குரோம்பேட்டை அடுத்த அஸ்தினாபுரம் நேதாஜி நகரில் வாழ்ந்து வந்த சுரேகா (18) அதே பகுதி மனோகரி (25) இருவர் உட்பட 5 பெண்களை அடையாறில் உள்ள வண்ணாந்துறை எல்லையம்மன் கோவில் தெருவில் ஒரு வீட்டில் அடைத்து வைத்து பாலியல் தொழில் நடத்தப்படுவதாக செய்தி கேள்விப்பட்டு பெண்களை போலீசார் மீட்பு. பாலியல் தொழில் நடத்திய கும்பல் கைது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 309. | 16.03.2009 | **திருநெல்வேலி மாவட்டம்:** நாங்குனேரி பெருந்தெருவைச் சேர்ந்தவர் முனியாண்டி மனைவி அம்பிகா இவர் மதுகால் குறிச்சியைச் சேர்ந்த நடராசன் மனைவி இந்திராவிடம் 17 ஆயிரம் டகன். அதிகம் வட்டி கேட்டு அம்பிகாவைத் தொல்லை கொடுத்தனர். வட்டி பணம் கொடுக்காததால் இந்திரா மீது ஆத்திரமடைந்து வீட்டின் பூட்டை உடைத்து சாவியை எடுத்து சென்றுள்ளனர். அம்பியா போலீசில் புகார். விசாரணை. வழக்கு பதிவு. | கந்து வட்டிக் கொடுமை | தமிழ்ஓசை |
| 310. | 16.03.2009 | **சிவகங்கை மாவட்டம்:** ராஜாஜி தெரு முத்துக்குமார் இவர் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞராக இருந்து வருகிறார். கீரனூர் செல்வதற்காக திருப்பத்தூர் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்த போது காவலர் காவலர்களிடம் அவதூறாக பேசிக் கொண்டிருந்தார். தட்டி கேட்ட முத்துக்குமாரை தாக்கி. தரதரவென காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று அவமானம்படுத்தியுள்ளனர். போலீசில் புகார். | காவல் நிலையச் சித்திரவதை. | தமிழ்சுடர் |
| 311. | 16.03.2009 | **தேனி மாவட்டம்:** பெரியகுளத்தில் தோட்டக் கலைக் கல்லூரி உள்ளது. இங்கு 2ம் ஆண்டு படிக்கும் மதுபாலா (19) இவர் திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்தவர். தன் அறையில் மர்மமான முறையில் தற்கொலை. போலீசில் புகார். விசாரணை. | | தமிழ்சுடர் |
| 312. | 16.03.2009 | **திண்டுக்கல் மாவட்டம்:** சவேரியார்பாளையம் 3வது தெருவில் ரேசன் கடை உள்ளது. அங்கு உள்ள ரேசன்அரிசி மூட்டைகளை ஆட்டோ மூலம் கடத்தி சென்றவர்களை பொது மக்கள் விரட்டி பிடித்து 37 ரேசன் அரிசி மூட்டைகள் மீட்பு. | ரேசன் அரிசி கடத்தல். | தமிழ்சுடர் |
| 313. | 16.03.2009 | **திருச்சி மாவட்டம்:** துறையூர் அடுத்த பச்சைமலை புத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர் வெள்ளி. மனைவி பாக்கியம் இறந்ததால் நாகம்மாள் என்ற பெண்ணை | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இரண்டாவதாக திருமணம். மகன் ராமச்சந்திரன் மனைவி ராணி உப்பிலியாபுரம் திமுக எம்.எல்.ஏவாக இருக்கிறார். மருமகள் ராணி மற்றும் மகன் ராமச்சந்திரன் இருவரும் வீட்டை பூட்டி விரட்டி விட்டதாக நாகம்மாள் உப்பிலியாபுரம் போலீசில் புகார். விசாரணை. | | |
| 314. | 16.03.2009 | **மதுரை மாவட்டம்:** ஹார்விநகரில் உள்ள அபோடு தொண்டு நிறுவனம் நிர்வாகி இருதயராஜ். இவர் கூடுதல் கண்காணிப்பாளர் சுந்தரராஜனை பார்க்க சென்றுள்ளார். அப்போது சிறைக்கு சென்ற போது 18901 பணமும், எடுத்துக் கொண்டு 2 மணி நேரம் சிறை, கஞ்சா, சிம்கார்டு, மொபைல் போன் உள்ளே எடுத்து சென்றதாக பொய் வழக்கு ஜோடிப்பு. ADGP–யிடம் முறையீடு. | | தினகரன் |
| 315. | 16.03.2009 | **மதுரை மாவட்டம்:** சமயநல்லூர் அருகே சத்தியமூர்த்தி நகர் செல்வி. இவரது கணவர் சிக்கந்தர்சாவடி கவியரசு. இருவரும்காதல் திருமணம் செய்து கொண்டனர். இதில் செல்வியிடம் கணவர் ஆட்டோ கேட்டு சித்திரவதை. போலீசில் புகார். கணவர் கைது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 316. | 16.03.2009 | **திருநெல்வேலி மாவட்டம்:** கிரிவலம் வந்த நல்லூர் அருகே உள்ள சொக்கலிங்கபுரம் நட்சேபநதி ஆறு உள்ளது. இந்த ஆற்றில் திருட்டு தனமாக மணல் அள்ளுவதாக போலீசுக்கு தகவல் கிடைத்தது. எஸ்.ஐ துரைசாமி ஏட்டு ராஜகோபால் மற்றும் போலீசார் அங்கு சென்றனர். இவர்கள் மீது டிராக்டர் ஏற்றி கொலை செய்ய முயற்சி. 3 பேர் கைது. | மணல் கடத்தல | தினத்தந்தி |
| 317. | 16.03.2009 | **திருவண்ணாமலை மாவட்டம்:** கலசப்பாக்கம் அருகே உள்ள வடகருங்காளப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் சாந்தி. கூலித் தொழிலாளி மனைவி தனலெட்சுமி. (27) இவருக்கு ஜீவிதா (9), மோனிகா (1 1/2) என்ற 2 குழந்தைகள் உள்ளது. இருவருக்கும் அடிக்கடி தகராறு. அடித்து சித்ரவதை. குழந்தைகள் இருவருக்கும் தனலெட்சுமி விஷம் கொடுத்து கொல்ல முயற்சி. மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது இறந்தனர். போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 318. | 17.03.2009 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம் தனக்கன்குளத்தை சேர்ந்தவர் காசிமாயன் மகள் மனநலம் பாதிக்கப்பட்டவர். இந்நிலையில் சந்தானம் (61) சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ததாக மகளிர் காவல் நிலையத்தில் புகார். சந்தானம் கைது. | குழந்தைகள் மீதுான வன்முறை | தினத்தந்தி |
| 319. | 17.03.2009 | **மதுரை மாவட்டம்:** நாகமலைபுதுக்கோட்டையைச் சேர்ந்த பன்னீர் செல்வம். இவரது மகள் சுதா. இவரை கடத்தி ராஜாமணி ஸ்ரீராம. என்பவர்கள் குஜராத் முறுக் கம்பெனிக்கு அழைத்து சென்றதாக நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் போலீசார் நடவடிக்கை எடுக்க நீதிமன்றம் உத்தரவு. | கொத்தடிமை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 320. | 17.03.2009 | **நாமக்கல் மாவட்டம்:** கொண்டப்பநாயக்கன்பட்டி செங்கோடன் மகள்+2 மாணவி. இவர் வீட்டில் தனியாக இருந்தார். கடந்த 13ம் தேதி மகளை செந்தில் (22) கடத்தி சென்று விட்டதாக தந்தை போலீசில் புகார். 5 பேர் கைது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 321. | 17.03.2009 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே உள்ள தேர்க்குன்றம்பட்டி சேர்ந்தவர் அடைக்கன். இவருக்கு சொந்தமான நிலத்தை பாதுகாக்க சின்ன அழகன் என்பவரை நியமித்துள்ளார். இதில் அடைக்கன் தெரியாமல் தனது மகள் சோலம்மாளுக்கு கிரையம் செய்துள்ளார். அதை ரத்து செய்து அடைக்கன் வீடு கட்டிக் கொண்டு இருந்துள்ளார். அப்போது அங்கு சென்ற 7 பேர் அவரை சாதி சொல்லி திட்டி தாக்கியுள்ளனர். போலீசிலல் புகார். விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 322. | 17.03.2009 | **கடலூர் மாவட்டம்:** நல்லத்தூர் கிராமம் புதுச்சேரி எல்லை பகுதியில் உள்ளது. இந்த கிராமத்தில் தலித் சமூகத்தை சேர்ந்த மக்கள் வசித்து வருகின்றனர். இந்த பகுதி வார்டு உறுப்பினர் சங்கர் என்பவர் உள்ளார். ஊராட்சி கூட்டம் நடத்தும் போது தகவல் கொடுப்பதில்லை. அரசு கட்டிடம் கட்டி கொடுப்பதில்லை. தீண்டாமை இந்த கிராமத்தில் உள்ளது என அப்பகுதி மக்கள் புகார். மார்ச் 17ந் தேதி சி.பி.எம். இது குறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடத்துவதாக அறிவிப்பு. | | தீக்கதிர் |
| 323. | 17.03.2009 | **விருதுநகர் மாவட்டம்:** நடையனேரி பகுதியில் அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளது. சுமார் 1700 மாணவர்கள் படித்து வருகின்றனர். இந்த பள்ளியில் +2ம் வகுப்பு மாணவர்களிடம் நபர் ஒன்றுக்கு 650 வீதம் வசூல் செய்துள்ளதாக மாணவர் சங்கம் கண்டனம். வசூலிக்கப்பட்ட தொகைக்கு எவ்வித ரசீதும் கொடுப்பதில்லை என புகார். ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரிக்கை. | கட்டாய கட்டணம் வசூல் | தமிழ்ஓசை |
| 324. | 17.03.2009 | **தூத்துக்குடி மாவட்டம்:** ஸ்டேட் வங்கிக் குடியிருப்பைச் சேர்ந்தவர் லீனோ (48) இவருக்கு புதியம்புத்தூர் என்றும் சிற்றூரில் சொந்தமாக நிலம் உள்ளது. இவர் நிலத்தில் தனியார் ஒப்பந்த நிறுவனத்தினர் 20 அடி ஆழம் வரை மணலை திருடி சென்றுள்ளனர். இதன் மதிப்பு 1 கோடி ஆகும். புதியம்புத்தூர் காவல் நிலையத்தில் லீனோ புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | மணல் கடத்தல் | தமிழ்ஓசை |
| 325. | 17.03.2009 | **கன்னியாகுமரி மாவட்டம்:** புதுக்கடை அடுத்த முஞ்சிறை தொடக்க நலவாழ்வு நிலையத்தில் சிவகாசி வையம்குண்டம்பட்டியை விசயலட்சுமி (28), ராமலட்சுமி (24) தனித்தனியாக இவர்கள் வசித்து வந்தனர். இவர்களுக்கு துணையாக சுலோச்சனா (32) என்பவர் இருந்து வந்தார். மற்றவர்கள் மருத்துவமனைக்கு சென்று விட்டனர். சுலோச்சனா மட்டும் தனியாக இருந்துள்ளார். மர்மமான முறையில் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிணம் தூக்கில் தொங்கியது. போலீசில் புகார். விசாரணை. | | |
| 326. | 17.03.2009 | **தஞ்சாவூர் மாவட்டம்:** அம்மாபேட்டை ஒன்றியத்தில் புத்தூர் நடுபட்டி மற்றும் 6 சிற்றூர்கள் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 300க்கும் மேற்பட்டவர்கள் தேவர் பண்ணையில் வேலை செய்து வருகின்றனர். அம்மக்கள் வீட்டு வசதி மின் இணைப்பு சீட்டு போன்றவை அப்பாவு தேவரின் பெயரில் உள்ளது. இதில் அம்மக்கள் கொத்தடிமைகளாக வைக்கபட்டு உள்ளனர். இதை எதிர்த்து விவசாய தொழிலாளர்கள் உண்ணாநிலை போராட்டம் நடத்துவதாக புகார். | | தமிழ்ஓசை |
| 327. | 18.03.2009 | **சிவகங்கை மாவட்டம்:** திருப்புவனம் அருகே உள்ள வெள்ளக்கரையை சேர்ந்த ஆதிமூலம் மகன் பாண்டிகருப்பு. மின் இணைப்பை பாண்டிகருப்பு தன் பெயருக்கு மாற்றி தருமாறு மின் வாரியத்தில் விண்ணப்பித்தார். மின் இணைப்பை பாண்டிகருப்பு பெயரில் மாற்றி தர மின் ஊழியர் சுப்பிரமணியன் 2000 லஞ்சம். லஞ்ச போலீசில் புகார். கைது. விாசரணை. | லஞ்சம் | தினகரன் |
| 328. | 18.03.2009 | **தேனி மாவட்டம்:** சின்னமனூர், ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்டது முத்துலாபுரம் பஞ்சாயத்து. இதற்குட்பட்ட மேட்டுகாலனி கிராமத்தில் சுமார் 300 பேர் வசித்து வருகின்றனர். 71 பேருக்கு பட்டா கொடுத்தும் வீடு கட்டித் தரப்பட வில்லை. மின்சார வதி இலலை. இதனால் அப்பகுதி மக்கள் இருட்டில் வாழ்கின்ற நிலை. மாவட்ட நிர்வாகம் தலையீட்டு வசதி செய்து தர மக்கள் கோரிக்கை. | | தினகரன் |
| 329. | 18.03.2009 | **மதுரை மாவட்டம்:** ஆணையூர் பகுதி செல்வராஜ் (56). இவர் மதுரையில் குடிநீர் வடிகால் வாரிய பிரிவு ஊழியர். இவரின் மனைவி ஜான்சிராணி. இருவருக்கும் தகராறு ஏற்பட்டது. இதனால் கத்தியால் குத்தி கொலை செய்ய முயற்சி. ஜான்சிராணி மதுரை மருத்துவமனையில் அனுமதி. போலீசார் விசாரணை. கணவர் கைது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 330. | 18.03.2009 | **கோவை மாவட்டம்:** கோவையை சேர்ந்தவர் ராஜா. இவருக்கும் இவரின் நண்பர்கள் இரண்டு பேருக்கும் இடையே திண்டுக்கல் திரையரங்களில் மோதல். ராஜாவை தாக்கி விட்டு 5 பவுன் தங்க நகையை பறித்து ஓட்டம். திண்டுக்கல் வட்ட காவல் நிலையத்தில் முறையீடு அளிக்க சென்றவரை காவலர்கள் வடக்கு காவல நிலையத்திற்கு செல்லுமாறு அலைகழிப்பு. இதுக் குறித்து எஸ்.பியிடம் புகார். தலைமைக் காவலர்கள் உதயக்குமார், திலிப்சிங் ஆகியோரை பணியிடை நீக்கம் செய்ய எஸ்.பி ஆணை. | காவல் நிலைய வன்முறை | தமிழ்ஓசை |
| 331. | 18.03.2009 | **திருவண்ணாமலை மாவட்டம்:** நார்த்தும்பூண்டி சாவித்திரி (55) இவருக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. உதவித் தொகை பெற | | தமிழ்ஓசை |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிர்வாக அலுவலர் சம்பத் (48) ரூ. 3 ஆயிரம் கையூட்டு லஞ்ச போலிசில் புகார். கைது. | | |
| 332. | 18.03.2009 | **தஞ்சாவூர் மாவட்டம்:** கும்பகோணத்தை அடுத்த முன்னங்குடி சின்னத்தெருவைச் சேர்ந்தவர் கணேசன் (50) மனைவி செல்வகுமாரி (35) இவரின் எதிர் வீட்டில் வசித்து வந்தவர் இராசமாணிக்கம் (60) இவரின் இரண்டாது மனைவி விஜயலட்சுமி (35) இவர் முன்னங்குடி சென்று நிலத்திற்கு நீர்பாய்ச்சி விட்டு குளித்து கொண்டிருந்த போது கணேசன் கையை பிடித்து இழுத்து மானபங்கம். கணவரிடம் முறை. ராசமாணிக்கம் மற்றும் பழனிவேல் ஆகியோர் கணேசன் வீட்டிற்கு சென்ற தகராறு. கணேசனின் மனைவி திட்டியதால் கோபத்தில் ராசமாணிக்கம் அவரது மகள் ஆகியோர் செல்வகுமாரியின் தொடையில் கத்தி குத்து. விசாரணை. வழக்கு பதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 333. | 18.03.2009 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி ஜெயபிரதா என்பவருக்கும் ராஜபாளையம் சுரேஷ் என்பவருக்கும் திருமணம் நடைபெற்றது. பெங்களூரில் வசித்து வந்தனர். இருவருக்கும் குடும்ப தகராறு. இவர்களுக்கு பிறந்த பெண் குழந்தை இறந்து விட்டதாக புகார். சுரேஷ் போலீசில் புகார். | | தமிழ்சுடர் |
| 334. | 18.03.2009 | **திருச்சி மாவட்டம்:** பாலக்கரையைச் சேர்ந்த விஜயகுமார். இவரது சகோதரர் முருகேசன் இவருக்கும் செல்வமணி மகன் கிருத்திகாவுக்கும் திருமணம் நடைபெற்றது. முருகேசன் மனைவியை விட்டுவிட்டு வெளிநாடு சென்றார். பிறகு அவர் திரும்பி வந்த போது கிருத்திகா தாய் வீடு சென்றார். இந்நிலையில் சேகர் மனைவிக்கும் முருகேசனுக்கும் தொடர்பு. போலீசில் புகார். விசாரணை என்ற பெயரில் முருகேசனை காவலர்கள் சித்திரவதை. | காவல் நிலையச் சித்திரவதை | தமிழ்சுடர் |
| 335. | 18.03.2009 | **தஞ்சாவூர் மாவட்டம்:** பட்டுக்கோட்டை அடுத்த தாமரஸ்கோட்டை கிராமம் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர் பாலையன். புதுக்கோட்டை கறம்பக்குடியில் தங்கி விவசாய வேலை செய்து வந்தவர் மாயம். மகன் இளையராஜா போலீசில் புகார். பாட்டுணர்ச்சி ஆற்றுக்கரையில் தலை துண்டிக்கப்பட்டு கொலை. | தலித்துகள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 336. | 19.03.2009 | **மதுரை மாவட்டம்:** திருநகர் அருகே தனக்கன்குளத்தை சேர்ந்தவர் நவநீதன் மனைவி நளினி (30) இவர் தைராய்டு நோயால் பாதிக்கப்பட்டவர். இவர் 9ந் தேதி நளினி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இவருக்கு ஆப்ரேசன் செய்வதாக டாக்டர் தேதி குறித்து தயாரான போது மருத்துவ ஊழியர்கள் நோயாளிகளிடம் ஆப்ரேசன் முடிந்து பணம் தர வேண்டும் என கேட்டு நிர்பந்தித்துள்ளார். நவநீதம் லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார். கைது. விசாரணை. | லஞ்சம் | தினகரன் |
| 337. | 19.03.2009 | **வேலூர் மாவட்டம்:** ஊசூரைச் சேர்ந்தவர் ராமமூர்த்தி. இவரது மகன் விஜயராஜன் (38). சின்ன தென்ரூர் கிராமத்தைச் சேர்ந்தவர் சிவம் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மருத்துவமனை நடத்தி வருகிறார். அதே பகுதி முன்னால் ராணுவ வீரர் ரமேஷ். இவரது மனைவி சங்கீதா (35) வயிற்று வலிக்கு சிகிச்சை பெற மருத்துவமனைக்கு சென்ற போது டாக்டர் சில்மிஷம். பொது மக்கள் மருத்துவமனையில் புகுந்து பொருட்களை சூறையாடினர். விசாரணை. கைது. | | |
| 338. | 19.03.2009 | **சேலம் மாவட்டம்:** சேலம் மாநகர ஆயுதப்படை செயல்பட்டு வருகிறது. இதில் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பாலீஸ் டோரில் பொருட்கள் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. இதில் 10 சதவீதம் லாபம் அதிகாரிகளுக்கு வழங்கப்படுவதாகவும், முடி திருத்தும் தொழிலாளர்களிடம் 3000 ரூபாய் கமிஷன் வாங்கப்படுவதாகவும் பெண் காவலர்களை வீட்டிற்கு வரவழைத்து செக்ஸ் முறைகோரும், அழைப்பதற்கு தனியாக ஒரு செல்லும் இருப்பதாக மேல் அதிகாரிகளுக்கு புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 339. | 19.03.2009 | **திண்டுக்கல் மாவட்டம்:** இந்த மாவட்டத்தில் தனியார் இன்ஜினியரிங் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள், ஐடிஐகள், பாராமெடிக்கல் கல்லூரிகள் செயல்பட்டு வருகிறது. இங்கு படிக்கும் தலித் மாணவர்களுக்கு கல்வி தொகையை மாணவர்களுக்கு வழங்காமல் கையெழுத்து வாங்கி கொண்டு இழுத்தடிப்பு. மாவட்ட ஆட்சியரிடம் புகார். | கல்வி தொகை மறுப்பு. | தீக்கதிர் |
| 340. | 19.03.2009 | **விருதுநகர் மாவட்டம்:** சாத்தூர் தாலுகா வெம்பக்கோட்டை ஒன்றியத்திற்கு உட்பட்டது செவல்பட்டி கிராமம். இங்கு வசித்து வரும் ஏழை மக்களுக்கு இலவச பட்டா கேட்டு மனு. இதில் 11 பேர்கள் மட்டும் தேர்வு. இவர்களுக்கு 22.08.02ல் நென்மேனியில் அமைச்சர் பட்டா வழங்கியதை அதிகாரிகள் சர்வே எண் ஒரே மாதிரியாக உள்ளது என திரும்ப வாங்கி கொண்டார். திருப்பி தராமல் அலை கழிப்பு. மாவட்ட கலெக்டரிடம் புகார். | | தீக்கதிர் |
| 341. | 19.03.2009 | **தூத்துக்குடி மாவட்டம்:** தானம் அறக்கட்டளையின் முத்துநகர் வட்டாரக் களஞ்சிய அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இவ்வமைப்பின் ஒட்டப்பிடாரம் பணியாளர் இந்திரா. இவர் சிலோன் காலனி உட்பட 4 பேர்களின் மகளிர் சுய உதவிக்குழு கட்டுப்பாட்டில் உள்ளது. இதில் வந்த 1 லட்சத்து 17 ஆயிரம் ரூபாயை ஏமாற்றி கையாடல். வங்கி கணக்கில் போலி கையெழுத்து போட்டு ரூ. 33 ஆயிரம் கையாடல் காவல்நிலையத்தில் புகார். வழக்கு பதிவு. | கையாடல் | ஜனசக்தி |
| 342. | 19.03.2009 | **தஞ்சாவூர் மாவட்டம்:** மதுக்கூரில் காவல் நிலையம் செயல்பட்டு வருகின்றது. இதன் இன்ஸ்பெக்டர் ரவிச்சந்திரன் இருந்து வருகிறார். இந்த காவல் நிலையத்தில் பாலாஜிக்கோட்டை தலித் மகேஸ்வரனை 25.02.09ந் தேதி சாதி பெயர் சொல்லி திட்டி கொலை செய்ய முயற்சி செய்த போது | கட்டப்பஞ்சாயத்து | ஜனசக்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எதிர்தரப்பினர் மீது புகார் கொடுத்து நடவடிக்கை இல்லை. FIR பதியப்படவிலலை. இதை போல் பல்வேறு வழக்குகளில் கட்டப் பஞ்சாயத்து செய்து வருவதை கண்டித்து மனி உரிமை கழக பொதுச் செயலாளர் மாவட்ட ஆட்சியாளரின் அலுவலகம் முன்பு காலவரையற்ற உண்ணாவிரதம். | | |
| 343. | 19.03.2009 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடி அருகே பேரையூர் கிராமம் முருகானந்தம் இவருக்கு வெளிநாட்டில் வேலை. மனைவி இந்திராணி. கணவர் மனைவி நடத்தையில் சந்தேகம். இருவருக்கும் இடையே தகராறு. மனமுடைந்து தூக்கு போட்டு தற்கொலை. போலிசில் புகார். வழக்குப் பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 344. | 19.03.2009 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழனி புதுநகரை சேர்ந்தவர் சபீதாபேகம் (39). இவர்களது மகள் நஜியா (18) தையல் வகுப்பு படித்து வந்தார். இவரை சிவகிரிப்பட்டி பாண்டி என்பவது தனது உறவினர்கள் உதவியுடன் கடத்தி சென்றதாக டவுன் போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 345. | 19.03.2009 | **மதுரை மாவட்டம்:** சிந்துபட்டியை சேர்ந்தவர் முத்துபேச்சி கணவர் பாண்டி முத்துபேச்சி விறகு எடுக்கு வயற்காட்டிற்கு சென்றவரை முத்துபாண்டி என்பவர் வழிமறித்து கையை பிடித்து இழுத்து மானபங்கபடுத்த முயற்சி. போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 346. | 19.03.2009 | **தர்மபுரி மாவட்டம்:** அரூர் பேருந்து நிலையத்தில் குளிர்பான கடை வைத்திருப்பவர் சம்பத். இவர் பேரூராட்சிக்கு கட்ட வேண்டிய தொகை செலுத்தியும் அலுவலர் புதியராஜ் ரூ. 3 ஆயிரம் லஞ்சம். போலீசில் புகார். விசாரணை கைது. | லஞ்சம் | தமிழ்சுடர் |
| 347. | 20.03.2009 | **மதுரை மாவட்டம்:** மகபூப்பாளையத்தில் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் அதே பகுதியைச் சேர்ந்த பிரியா (13) பிரியதர்ஷினி (13) பாண்டிச்செல்வி (13) ஆகிய 3 மாணவிகள் படித்து வருகின்றனர். வகுப்பை பெருக்கும் போது ஆசிரியை சரியாக பெருக்கவில்லை என பேப்பரை சாப்பிடுங்கள் என திட்டியுள்ளார். மாணவிகள் எஸ்.எஸ் காலனி காவல் நிலையத்தில் புகார். போலீசார் விசாரணை. | பள்ளி வன்முறை | தினகரன் |
| 348. | 20.03.2009 | **விருதுநகர் மாவட்டம்:** விருதுநகரில் 50 ஆண்டுகளாக அடகு கடை வைத்திருப்பவர் கமலக்கண்ணன். கடந்த 2007 ஆகஸ்ட் 7ந் தேதி திருமங்கலம் ஏட்டு (தற்போது ஒத்தக்கடையில் இன்ஸ்பெக்டராக உள்ளார்) ஒருவரை அழைத்து வந்து திருட்டு நகை வாங்கியதாகவும் அதை தருமாறும் சேட்டு 12 பவுன் நகை 92 கிராமம் கம்மல் தருமாறு கூறியும் அதை ஒப்படைக்கவில்லை. நீதிமன்றத்தில் புகார். | காவல் சித்திரவதை. | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 349. | 20.03.2009 | **திண்டுக்கல் மாவட்டம்:** ஒட்டன்சத்திரம் பஸ் ஸ்டாண்ட் அருகே டாக்டர் ராஜமூர்த்திக்கு சொந்தமான கமலா மருத்துவமனை உள்ளது. இந்த மருத்துவமனையில் சந்திரசேகரன் (52) என்பவர் டாக்டர் இல்லாத நேரங்களில் டாக்டராக செயல்பட்டு வந்தார். மேலும் அதே பகுதி டாக்டர் அண்ணாமலை என்பவர் பல ஆண்டுகளாக மருத்துவமனை நடத்தி வந்தார். இவர் இறந்த பிறகு இவரது மகன் அருணகிரி (48) டாக்டருக்கு படிக்காமலே நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வந்தார். இதுக் குறித்து போலீசில் புகார். சந்திரசேகர் அருணகிரி கைது. விசாரணை. | போலி டாக்டர்கள் | தினகரன் |
| 350. | 20.03.2009 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் துரைச்சாமியாபுரம் பகுதி கருப்பசாமி (30) இவர் மும்பையில் பணிபுரிந்து வந்துள்ளார். அங்கு அவர் தமிழ்ப்பெண் நித்யாவை காதலித்து திருமணம் செய்து கொண்டார். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு ராஜபாளையம் வந்து விசைத்தரியில் பணி புரிந்து வந்துள்ளார். இதில் முறைப்பெண்ணை திருமணம் செய்ய முடிவு செய்து நித்யாவை கொடுமைப்படுத்தி வந்துள்ளார். காவல் நிலையத்தில் புகார். வழக்கு நீதிமன்றத்தில் நடந்து வந்தது. கணவர் வாக்கை வாபஸ் பெற மிரட்டி உடலில் மண்ணெணைய் ஊற்றி எரிப்பு. ஆர்.டி.ஓ விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 351. | 20.03.2009 | **மதுரை மாவட்டம்:** சோலையழகுபுரம் பகுதி உள்ளது. மாவட்ட வழங்கல் அதிகாரிகள் எஸ். ஞானசேகரன் தலைமையில் ரோந்து அப்போது ஒரு ஹோட்டலில் 185 லிட்டர் மண்ணெணைய் பறிமுதல். வழக்கு பதிவு. | கடத்தல் | தினமணி |
| 352. | 20.03.2009 | **மதுரை மாவட்டம்:** மேலூர் பகுதியில் ரேசன் கடைகள் செயல்பட்டு வருகிறது. அங்கு டேங்கர் லாரியில் 7 ஆயிரம் லிட்டம் மண்ணெணைய் பறிமுதல். வட்ட வழங்கல் அதிகாரி முருகானந்தம் நடவடிக்கை. டிரைவர் தப்பி ஓட்டம். விசாரணை. | கடத்தல் | தினத்தந்தி |
| 353. | 20.03.2009 | **கரூர் மாவட்டம்:** க. பரமத்தி ஊராட்சி பெரியார்நகர் ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதி உள்ளது. தமிழக அரசால் 2001ல் ஆதி திராவிடர் நலத்துறை மூலம் 2,630 ஹெக்டேர் நிலம் தமிழக அரசால் கிரையம் பெறப்பட்டு அப்பகுதி மக்களுக்கு 144 வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டது. ஆனால் அப்பகுதியில் அடிப்படை வசதிக்கூட செய்யாமல் தவிப்பு. சமுதாயக் கூட பணி பாதி அளவில் செய்யப்பட்டு முடிக்காமல் முட்டுக்கட்டை பொது மக்கள் மாவட்ட நிர்வாகத்திடம் புகார். | | தீக்கதிர் |
| 354. | 20.03.2009 | **தேனி மாவட்டம்:** தேனி அல்லிநகரம் அம்பேத்கர் நடு தெருவைச் சேர்ந்த இளம் விதவை எம். சவுரியம்மாள். இவரின் கணவர் இறந்து விட்ட நிலையில் 3 குழந்தைகளுடன் கூலி வேலை செய்து வாழ்க்கை நடத்தி வருகிறார். வீட்டின் அருகில் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வசிப்பவர் பாண்டி தகராற முறையில் நடக்க முயற்சி. போலீசில் புகார். போலீசார் எச்சரிப்பு சவுரியம்மாளுக்கு எய்ட்ஸ் மற்றும் ஊரை விட்டு ஒதுக்கி வைதிருப்பதாக கூறி வரி வாங்க ஊர்காரர்கள் மறுப்பதாக எஸ்.பியிடம் புகார். விசாரணை. | | |
| 355. | 20.03.2009 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகே ரிசர்வ் லைன் பகுதி மாரி (எ) மகேசுவரன் (35) மனைவி சிவசக்தி (29) இருவருக்கும் அடிக்கடி தகராறு. மனமுடைந்த சிவசக்தியிடம் மகேசுவரன் கிணற்றில் குதித்து தற்கொலை. போலீசில் புகார். விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 356. | 20.03.2009 | **சேலம் மாவட்டம்:** இந்த மாவட்டத்தில் ஏராளமான கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் உள்ளது. இங்கு கடன் வழங்காமலே போலி பத்திரங்கள் உருவாக்கி கடன் வழங்கியதாக முறைகேடு நடைபெற்று வருவதாக புகார். சேலம் தடுப்பு காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் பன்னீர்செல்வம் ஆய்வு. இதில் 2004 முதல் 2007 வரை 8 கோடி முறைகேடு 200 பேரிடம் விசாரணை. சங்க செயலாளர்கள் கைது. | முறைகேடு | தமிழ்ஓசை |
| 357. | 20.03.2009 | **தஞ்சாவூர் மாவட்டம்:** கும்பகோணம் அடுத்த சுவாமிமலையை சேர்ந்தவர் சின்னத்தம்பி (42). இவரது மனைவி வள்ளி. இருவருக்கும் அடிக்கடி தகராறு இருந்து வந்தது. இதனால் வள்ளி தாய் வீட்டிற்கு சென்று பிரிந்து வாழ்ந்து வந்தார். பிறகு கணவர் வீட்டிற்கு கூட்டி வந்துள்ளனர். இந்நிலையில் மறுபடியும் இருவருக்கும் இடையே தகராறில் கணவர் மனைவியை வெட்டிக் கொலை. போலீசில் புகார்.விசாரணை | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 358. | 20.03.2009 | **கடலூர் மாவட்டம்:** கருங்குறிச்சியை சேர்ந்த வைத்தியலிங்கம் இவரது மனைவி இளவரசி மாயம். இவர்களது மகள் செல்வியை கடத்தி சென்று விழுப்புரத்தில் வீட்டில் அடைத்து வைத்து பாலியல் பலாத்காரம். ஸ்டீபன்ராசு, லட்சுமி ஆகியோர் கைது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 359. | 20.03.2009 | **கன்னியாகுமரி மாவட்டம்:** தக்கலைப்பேருந்து நிலையப் பகுதியில் வருவாய்துறையினர் சோதனை. அந்த பகுதிக்கு வந்த லாரியை சோதனை செய்த போது 200 மூட்டை ரேசன் அரிசி பறிமுதல். டிரைவர் தப்பி ஓ.ட்டம். விசாரணை. | ரேசன் அரிசி கடத்தல். | தமிழ்ஓசை |
| 360. | 21.03.2009 | **விழுப்புரம் மாவட்டம்:** மூங்கில்துரைப்பட்டு கிராமம் குமார். இவர் திருச்சியில் ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார். 1999ல் திருவண்ணாமலை அருகில் புனிதா என்ற பெண்ணை திருமணம் செய்துள்ளார். செங்கல்பட்டில் ஒரு தனியார் கல்லூரியில் விரிவுரையாளர் பணி. முதல் திருமணத்தை மறைத்து தனலெட்சுமியை இரண்டாவது திருமணம். மறுபடியும் இரு திருமணத்தையும் மறைத்து சரளா (27) என்பரை திருமணம் செய்து கொண்டார். சரளாவிடம் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரதட்சணைக் கேட்டு சித்ரவதை. போலீசில் புகார். கைது. | | |
| 361. | 21.03.2009 | **மதுரை மாவட்டம்:** திருப்பாலையை சேர்ந்தவர் கண்ணன். இவர் மதுரை ரிசர்வ் லைன் பகுதியில் செல்போன் கடை வைத்துள்ளார். இவர் எம்.எம். நகரில் புதிய பிளாட்டுக்கு போர்வெல் போட மின் இணைப்பு– கேட்டு மனு. சேதுராமன் மின் இணைப்பு பெற 1500 லஞ்சம். லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார். கைது. | லஞ்சம் | தினமணி |
| 362. | 21.03.2009 | **மதுரை மாவட்டம்:** மீனாட்சிபுத்தைச் சேர்ந்தவர் கயல்விழி (23) கணவர் சிவகங்கை மதகுட்டி சக்திமுருகன் கயல்விழியிடம் தொடர்ந்து 3 லட்சம் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாக திருப்பரங்குன்றம் மகளிர் காவல் நிலையத்தில் புகார். 7 பேர் மீது வழக்குப் பதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 363. | 21.03.2009 | **மதுரை மாவட்டம்:** சிவரக்கோட்டை கந்தசாமி மகள் மீரா (17) +2 மாணவி. ஆனால் பெற்றோர்கள் மீராவிற்கு திருமணம் செய்து வைக்க ஏற்பாடு. மீரா கல்லூரி படிக்க வேண்டும் எனக்கு திருமணம் வேண்டாம் என மறுப்பு. பெற்றோர் கட்டாயப்படுத்தியதால் வீட்டை விட்டு ஓடி சென்று போலீசில் புகார். பெற்றோரிடம் விசாரணை. | | மாலைமலர் |
| 364. | 21.03.2009 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** திலகவதி தெரு நரசிம்மன் கூலி தொழிலாளி. இவரது மகள் சங்கரி (100 நகராட்சி தொடக்கப்பள்ளியில் 5ம் வகுப்பு படித்து வந்தார். அதே பள்ளியில் கே.எஸ்.பி நகர் ஈஸ்வரன் 5ம் வகுப்பு படித்து வந்தார். இருவரையும் ஒரு கும்பல் மயக்கப்பொடி தூவி ஆட்டோவில் கடத்தல். பெற்றோர்கள் போலீசில் புகார். விசாரணை. | | மாலைமலர் |
| 365. | 21.03.2009 | **மதுரை மாவட்டம்:** கூடல்நகர் ரவீந்திரநாத்தாகூர் தெரு கண்ணப்பன் மகள் ப்ரீத்தி (17) இவர் தனியார் பள்ளியில் +2 படித்து வந்தார். பள்ளியில் தேர்வு எழுதி வி0ட்டு வந்தவர் கடந்த 14ந் தேதி பாட்டி வீட்டுக்கு சென்று விட்டு வருவதாக சென்றவர் வீடு திரும்பவில்லை. அதே பகுதி கார்த்திக் கடத்தி சென்றதாக பெற்றோர் போலீசில் புகார். 6 பேருக்கு போலீசில் வலை வீச்சு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 366. | 21.03.2009 | **சிவகங்கை மாவட்டம்:** மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் தாட்கோ அலுவலகம் உள்ளது. இங்கு தலித் மக்களுக்கு தாட்கோ கடன் மானியத்துடன் வழங்கப்பட்டு வருகிறது. திருப்பாச்சேத்தி மாரநாடு கிராமம் காளீஸ்வரன் தாயார் நிலம் வாங்க கடன் கேட்டடு மனு. கடன் தர தாட்கோ மேலாளர் 1500 லஞ்சம். போலீசில் புகார். மேலாளர் கைது. | லஞ்சம் | தினத்தந்தி |
| 367. | 21.03.2009 | **வேலூர் மாவட்டம்:** காட்பாடி அருகே உள்ள மெட்டுக்குளம் வேர்க்காடு ஆர்.டி.ஒ சோதனைச் சாவடி உள்ளது. இந்த சோனை சாவடிகளில் கண்ணில் வராத 27,000 பறிமுதல். அங்கு லஞ்சமாக தக்காளி, முட்டைகோஸ், காளிபிளவர் ஆகியவை | லஞ்சம் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | லஞ்சமாக வாங்கியதை பறிமுதல் செய்தனர். விசாரணை. கைது. | | |
| 368. | 21.03.2009 | **விருதுநகர் மாவட்டம்:** காரியாபட்டி மேலக்கன்னங்குளத்தை சேர்ந்தவர் ராமர் (40) மனைவி லட்சுமி (32) கருத்து வேறு பாடு காரணமாக பிரிந்து வாழ்ந்து வந்தனர். குழந்தையை தூக்கிய போது தகராறு. அதில் மனைவி பயிற்றி குத்தி விட்டு தப்பி ஓட்டம். போலீசில் புகார். விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 369. | 21.03.2009 | **திருவாரூர் மாவட்டம்:** காலைபெருமலை தலித் பஞ்சாயத்து தலைவர் வசந்தா. இந்த பகுதியில் அதிகமாக தலித் மக்கள் வசித்து வருகின்றனர். தேவர் சமூகத்தை சேர்ந்த துணை தலைவர் தமிழரசி இருவருக்கும் கிராம சபா கூட்டத்தில் தகராறு. இதில் தமிழரசி கிராம சபா கூடத்தை புறக்கணித்து தகாத வார்த்தைகளை கூறி கூட்டத்தில் கலந்து கொள்ள மறுப்பு. இதனால் பஞ்சாயத்து அலுவலகம் 4 மாதமாக பூட்டி வைப்பு. | தலித்துகள் மீதான வன்முறை | The Hindu, Express |

மக்கள் கண்காணிப்பகம்